www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

VNR6T

விருதுநகர் மாவட்டம்

தொகுத்தறித் தேர்வு - டிசம்பர் 2024

-----

வகுப்பு 6

காலம்: 2.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 60

## பகுதி - I

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **10×1=10**

1) மாணவர்கள் நூல்களை ................ கற்க வேண்டும்.

அ) மேலோட்டமாக ஆ) மாசுற இ) மாசற ஈ) மயக்கமுற

2) மெல்லினத்திற்கான இனஎழுத்து இடம்பெறாத சொல் எது?

அ) மஞ்சள் ஆ) வந்தான் இ) கல்வி ஈ) தம்பி

3) நிலையான செல்வம் ................

அ) தங்கம் ஆ) பணம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்

4) பயன்+இலா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ................

அ) பயனிலா ஆ) பயன்னில்லா இ) பயன்இலா ஈ) பயன்இல்லா

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக:**

5) காமராசரைக் 'கல்விக் கண் திறந்தவர்' என மனதாரப் பாராட்டியவர் ................

6) பழையன கழிதலும் ................ புகுதலும்.

**இ) பொருத்துக:**

7) விடிவெள்ளி - பஞ்சுமெத்தை

8) மணல் - ஊஞ்சல்

9) புயல் - போர்வை

10) பனிமூட்டம் - விளக்கு

## பகுதி - II

**அ) ஓரிரு சொற்களில் விடையளிக்க: (ஏதேனும் ஐந்து வினாக்கள் மட்டும்)** **5×2=10**

11) காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?

12) இன எழுத்துகள் என்றால் என்ன?

13) கண்மணியே கண்ணுறங்கு பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?

14) மயங்கொலி எழுத்துகள் யாவை?

15) நாம் எத்தகைய சொற்களைப் பேச வேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்?

16) தமிழன் எதற்கு அஞ்சினான்?

17) வணிகம் என்றால் என்ன?

**உ) ஓரிரு தொடர்களில் விடையளிக்க: (ஏதேனும் மூன்று வினாக்கள் மட்டும்)** **3×4=12**

18) ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?

19) நீங்கள் படித்து என்னவாக விரும்புகிறீர்கள்? ஏன்?

20) காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?

21) நீங்கள் முதலமைச்சரானால் கல்வி முன்னேற்றத்திற்காக என்னென்ன திட்டங்களை வகுப்பீர்கள்?

22) தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?

23) சிறு வணிகம், பெரு வணிகம் - வேறுபடுத்துக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி - III

**ஊ) பின்வரும் கவிதைப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக:** 4+2=6

24) 'மன்னனும்' எனத் தொடங்கும் மூதுரைப் பாடலை எழுதுக.

25) 'சொல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

## பகுதி - IV

**எ) பின்வரும் வினாக்களுக்கு விடையளி: (ஏதேனும் ஐந்து வினாக்கள் மட்டும்)** 5×2=10

26) **கீழ்க்காணும் சொற்களில் அமைந்துள்ள இன எழுத்துகளை எடுத்து எழுதுக:**

அ) நுங்கு ஆ) வஞ்சம் இ) சுண்டல் ஈ) நன்று

27) **முறை மாறியுள்ள சொற்களைச் சரியான இடத்தில் பொருத்திச் சொற்றொடரை நிறைவு செய்க:**

அ) முளையிலே விளையும் தெரியும் பயிர்

ஆ) ஆக்குவோம் இல்லாமை கல்லாமையை

28) **தொடர்களில் உள்ள மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக:**

அ) தேர்த் திருவிலாவிற்குச் சென்றனர்.

ஆ) வாழைப்பலம் உடலுக்கு மிகவும் நல்லது.

29) **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

அ) கடலுக்கு வேறுபெயர் ................ (பரவை / பறவை)

ஆ) பூ ................ வீசும். (மனம் / மணம்)

30) **பின்வரும் நவமணிகளை அகரவரிசைப்படுத்தி எழுதுக:**

நீலம், கோமேதகம், மாணிக்கம், வைரம், பவளம், வைடூரியம், முத்து, புஷ்பராகம், மரகதம்.

31) **சொற்களைச் சேர்த்துத் சொற்றொடரை நீட்டி எழுதுக:**

அ) நான் பள்ளியில் படிக்கிறேன். (ஆறாம் வகுப்பு, அரசு)

ஆ) பொன்னன் முன்னேறினான். (வணிகம் செய்து, பொருளீட்டி, துணி)

32) **கலைச்சொல் தருக:**

அ) E-Library

ஆ) Consumer

## பகுதி - V

**ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க:** 1×6=6

33) அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

34) உழைப்பே மூலதனம் கதையைச் சுருக்கி எழுதுக.

## பகுதி - VI

**ஐ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க:** 1×6=6

35) 'பொங்கல் திருநாள்' - என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

36) பிறந்த நாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.

----------

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com